சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:13.08.2024

DW1: விக்னேஷ்குமார் த/பெ– ரவிராஜ்

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

இந்த வழக்கில் நான் 3ம் பிரதிவாதி ஆவேன். 2ம் பிரதிவாதி எனது பாட்டி. நான் விஸ்வநத்தம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் பிசினஸ் செய்து வருகிறேன். தாவா சொத்து வாதியின் தாத்தா கந்தசாமி ரெட்டியாவிற்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். கந்தசாமி ரெட்டியாருக்கு வாரிசுகள் காந்தியம்மாள், சந்திரன், தனபாக்கியம், தனலட்சுமி ஆகியோர்கள் என்றால் சரிதான். எனது பாட்டி 2ம் பிரதிவாதி தாவா சொத்து உள்ள தவசிலிங்காபுரம் கிராமத்தில் குடியிருந்து வந்து தற்போது என்னுடன் வசித்து வருகிறார்கள். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 20.04.1985ல் எனது பாட்டி கிரையம் வாங்கியது என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணத்தில் கந்தசாமி ரெட்டியாருக்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணம் காந்தியம்மாள் மற்றும் சந்திரன் எழுதிக்கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கிரையபத்திரத்தில் கந்தசாமியின் பெண் வாரிசுகள் தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான். அதனால் அந்த கிரைய ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)